**O.S. No. : 100/2020**

Dated: 12.08.2026

**பி.வா.சா.1 : விக்னேஷ் ; த/பெ. ராஜன்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

18. வாதி எவ்வளவு பரப்பளவு கொண்ட பூமிக்காக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா அல்லது தெரியாதா என்றால் தெரியும், 20 சதுரடி பரப்பளவு கொண்ட பூமிக்கு பரிகாரம் கோரியுள்ளார். எனது பாட்டியின் பெயர் மல்லம்மாள் என்றால் சரிதான்.

19. எனது மல்லம்மாள் பெயரில் பழைய சர்வே எண் 571/3, புதிய சர்வே எண் 930/3–ல் 2 சென்ட்டிற்கு தமிழக அரசு பட்டா வழங்கியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அதற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் தொடர்பில்லை. நான் எனது தாத்தா பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க எந்தவிதமான ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

20. நான் குடியிருக்கும் கதவு எண் 6/82 கொண்ட வீடு கடநாடு கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் பழைய சர்வே எண் 351, புதிய சர்வே எண் 571/3–ல் அமைந்துள்ளது. நான் கூறுவது சரியல்ல என்றும், மேற்படி கதவு எண் 6/82 கொண்ட வீடானது எனது பாட்டி மல்லம்மாள் என்பவருக்கு கொடுக்கப்பட்ட பட்டா பூமியில்தான் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, எனது பாட்டி பெயரில் உள்ள பட்டா தவறுதலாக உருவாக்கப்பட்டிருக்கலாம், ஆனால் கதவு எண் 6/82 கொண்ட வீடு எனது தாத்தா பெள்ளி கவுடர் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா பூமியில்தான் அமைந்துள்ளது.

21. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பத்தி–7–ல் எனது வீடு உயரமான பகுதியில் அமைந்துள்ளதால் அதை வலுபடுத்துவதற்காக தடுப்பு சுவர் கட்டியுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கு வேறு நபருக்கு கொடுக்கப்பட்ட பட்டா பூமியில் தடுப்பு சுவர் கட்டுவதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, நாங்கள் எங்களது அனுபவத்தில் உள்ள இடத்தில்தான் தடுப்பு சுவர் கட்டியுள்ளோம்.

22. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 புகைப்படங்களை யார் எடுத்தது என்றால் அதை நான்தான் எடுத்தேன். மேற்படி புகைப்படங்களை எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கட்டிடம் எங்களது அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிப்பதற்காகவும், மேலும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது

என்பதை காண்பிக்கவும், மேலும் கழிவுநீர் கால்வாயை தாண்டிதான் தடுப்பு சுவர் கட்டப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கவும் புகைப்படங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

23. பி.வா.சா.ஆ.2 புகைப்படங்களில் எங்களது வீடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் பிரச்சனைக்குரிய பகுதி காண்பிக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.2 புகைப்படங்கள் தாவா சொத்தில் எடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல, அந்த இடத்தில்தான் எடுக்கப்பட்டது. நான் கூறுவதுபோல எந்தவிதமான கட்டிடமும் கட்டி முடிக்கப்படவில்லை என்றும், நாங்கள் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கும்போதே இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறப்பட்டுவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

24. தமிழ்நாடு அரசால் வேறு நபருக்கு பட்டா வழங்கப்பட்ட இடத்தில் அத்துமீறி கட்டிடம் கட்ட எங்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, வாதி வாங்கியுள்ள பட்டாவிற்கும், நாங்கள் தடுப்பு சுவர் கட்டியுள்ள இடத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை, நாங்கள் எங்களது அனுபவத்தில் உள்ள இடத்தில்தான் தடுப்பு சுவர் கட்டியுள்ளோம்.

25. நான் வாதி பட்டா பெற்றுள்ள இடத்திற்கும், நாங்கள் தடுப்பு சுவர் கட்டியுள்ள இடத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று கூறும் நிலையில் வாதி பட்டா பெற்றுள்ள பூமியை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இருக்காது என்றால் சரிதான், அதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை.

26. அதனால் வாதி வழக்கில் கோரியுள்ளபடி பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.08.12 19:57:57 +0530